முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை - 2020 சனவரி

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

(Financial Accounting Basics)

2020-01-25
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *விடைகள் உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருந்தால், அவற்றைத் தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின் வரைவிலக்கணங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQ's) தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல்* ***வினைச் சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் நிரலில் தரப்பட்டுள்ள* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பதினைந்து (15) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

***1.1*** *முதல்* ***1.8*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க. உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கங்களை வினா ஒழுங்கில் (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.*

**1.1** பின்வருவோருள் நிதிக் கூற்றுக்களின் பயன்பாட்டாளர்களாக அமைவது:

(1) உரிமையாளர்கள் (2) ஊழியர்கள் (3) முதலீட்டாளர்கள் (4) மேற்கூறிய யாவும்

(02 புள்ளிகள்)

**1.2** காசுப் பெறுவனவுகளைப் பொருட்படுத்தாது, வருமானமானது உரிய கணக்கீட்டுக் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்படுகிறது. இதனுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கருவாக அமைவது:

(1) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு (2) அட்டுறு எண்ணக்கரு

(3) பண அளவீட்டு எண்ணக்கரு (4) உரிம எண்ணக்கரு

(02 புள்ளிகள்)

**1.3** **ஸீனா டிரேடர்ஸின்** களஞ்சியக்காப்பாளராகப் புதிதாக நியமனம் பெற்ற **பெரேரா** என்பவர் குறிப்பிட்ட சில இருப்பு உருப்படிகள் களஞ்சியத்தில் காணப்படாமையை அவதானித்தார்.

தேவையான இருப்பு உருப்படிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொள்வனவுத் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்றைச் செய்வதற்கு **பெரேராவால்** பயன்படுத்தப்பட வேண்டிய மூல ஆவணமாக அமைவது எது?

(1) கொள்வனவுக் கட்டளை (PO) (2) நாட்குறிப்பேட்டு வவுச்சர் (JV).

(3) பொருள் பெறுகைச் சீட்டு (GRN). (4) பொருள் கோரும் சீட்டு (MRN).

(02 புள்ளிகள்)

**1.4**

| சொத்து | = | உரிமையாண்மை | + | பரிப்பு |
|---|---|---|---|---|
| 150,000 | = | 150,000 | + | - |
| (140,000) | | (140,000) | | |

மேலே காட்டப்பட்ட கணக்கீட்டுச் சமன்பாட்டுடன் தொடர்புடைய மிகவும் சரியான ஊடுசெயலாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) ரூபா 140,000/- கிரயமான பொருட்கள் ரூபா 150,000/- க்கு விற்கப்படல்

(2) ரூபா 150,000/- கிரயமான பொருட்கள் ரூபா 140,000/- க்கு விற்கப்படல்

(3) ரூபா 150,000/- பெறுமதியான பொருட்கள் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டதுடன் ரூபா 140,000/- ஆனது சேகரிக்கப்பட்டது.

(4) ரூபா 150,000/- பெறுமதியான பொருட்கள் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டதுடன் ரூபா 140,000/- ஆனது செலுத்தப்பட்டது. (02 புள்ளிகள்)

**1.5** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சரசி டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு:

| விபரம் | ரூபா |
|---|---|
| 2018 ஏப்ரல் 01 இலான நிகரச் சொத்துக்கள் | 975,000 |
| 2019 மார்ச் 31 இலான நிகரச் சொத்துக்கள் | 1,350,000 |
| உரிமையாளரால் ஆண்டின்போது ஈடுபடுத்தப்பட்ட மேலதிக மூலதனம் | 500,000 |
| உரிமையாளரால் ஆண்டின்போதான எடுப்பனவுகள் | 350,000 |

மேற்கூறிய தகவல்களின் அடிப்படையில் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபமாக அமைவது:

(1) ரூ.525,000/-. (2) ரூ.225,000/-. (3) ரூ.1,475,000/-. (4) ரூ.375,000/-.

(02 புள்ளிகள்)

**1.6** கணக்குகளின் பாரம்பரிய வகைப்படுத்தலின் கீழ், மெய்க் கணக்கு ஒன்றிற்கான உதாரணமாக அமைவது கீழ்வருவனவற்றுள் எது?

(1) கடன்பட்டோர் கணக்கு (2) விற்பனைக் கணக்கு

(3) கடன் வட்டிக் கணக்கு (4) இயந்திரக் கணக்கு (02 புள்ளிகள்)

**1.7** பிரத்தியேக (தனிப்பயனாக்கப்பட்ட) கணக்கீட்டு மென்பொருள் ஒன்றிற்கான ஓர் உதாரணமாக அமைவது:

(1) ACCPAC (2) விரைவுப் புத்தகம் (Quick Book)

(3) சம்பளப் பட்டியல் (payroll) முறைமை (4) Tally (02 புள்ளிகள்)

**1.8** கீழ்வரும் ஊடுசெயல்களில் சொத்துக்களில் அதிகரிப்பு விளைவை ஏற்படுத்தும் ஊடுசெயலாக அமைவது:

(1) வியாபாரத்தின் உரிமையாளர் ரூபா 1.5 மில்லியன் காசினை மேலதிக மூலதனமாக முதலீடு செய்தல்

(2) மார்ச் மாத நீர்க் கட்டணப் பட்டியல் ரூபா 75,000/- செலுத்தப்படல்

(3) ரூபா 100,000/- தொகையானது வியாபாரக் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து சேகரிக்கப்படல்

(4) ரூபா 125,000/- தொகையானது வியாபாரக் கடன்கொடுத்தோர் ஒருவருக்குத் தீர்ப்பனவு செய்யப்படல். (02 புள்ளிகள்)

***1.9*** *முதல்* ***1.15*** *வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குமுறையாக (ஒன்றன்கீழ் ஒன்றாக) எழுதி, அந்த இலக்கங்களுக்கு எதிரே எழுதுக.*

**1.9** தனியுடைமை வியாபாரமொன்றின் நிதிச் செயற்பாட்டுடன் நேரடியாகத் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களின் கூறுகள் (elements) இரண்டினை (02) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**1.10** ‘‘கணக்கீட்டுக் கால எண்ணக்கரு’’ இனைச் சுருக்கமாக விபரிக்குக. (03 புள்ளிகள்)

**1.11** **ABC டிரேடர்ஸின்** கீழ்வரும் ஊடுசெயல்கள் ஒவ்வொன்றையும் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப் படும் சம்பந்தப்பட்ட ‘‘மூல ஆவணத்தை’’ இனங்காண்க:

(a) வாடிக்கையாளரால் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 465,000/- பெறுமதியான பொருட்கள் அவற்றின் குறைந்த தரம் காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டன.

(b) வியாபாரத்தின் பொருள் விநியோகத் தேவைக்காக ரூபா 2,500,000/- பெறுமதியான லொறி ஒன்று கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.

(c) வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 25,000/- பெறப்பட்டது. (03 புள்ளிகள்)

**1.12** **பிரியந்த ஸ்ரோர்ஸ்** ரூபா 1,250,000/- பெறுமதியில் இயந்திரமொன்றை 2018 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்தது. இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் என்பதுடன் பயன்தரும் ஆயுட்கால முடிவில் அதன் ஒடிவுப் (ஈற்றுப்) பெறுமதி ரூபா 250,000/- ஆகும். வியாபாரத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்வதாகும்.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயந்திரத்தின் பெறுமானத்தேய்வைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.13** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றின் அனுகூலங்கள் மூன்றினைப் (03) பட்டியலிடுக. (03 புள்ளிகள்)

**1.14** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உங்களது விடைகளை (சரியானது அல்லது தவறானது) தரப்பட்ட விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக:

(a) உரிமையாளர் எடுப்பனவுகள் உரிமையாண்மையில் அதிகரிப்பு விளைவை ஏற்படுத்துகின்றன.

(b) சகல நாட்டதாரர்களும் (அக்கறையுடைய தரப்பினரும்) வியாபாரத்தின் முகாமைக் கணக்கீட்டு அறிக்கைகளைப் பயன்படுத்துகின்றனர்.

(c) பொருண்மை எண்ணக்கருவின் அடிப்படையில், பொருண்மையான உருப்படிகள் நிதிக் கூற்றுக்களில் தனியாக வெளிக்காட்டப்பட வேண்டும்.

(d) வியாபாரத்திற்கு எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்குவது பரிப்பொன்றின் ஒரு தேர்வு நிபந்தனை (criteria) ஆகும். (04 புள்ளிகள்)

**1.15** **ரோமா டிரேடர்ஸின்** 2019 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்குமான சரியான இரட்டைப் பதிவுகளைக் குறிப்பிடுக:

(a) கடையைப் பழுதுபார்ப்பதற்காக வங்கி ஒன்றிடமிருந்து ரூபா 500,000/- கடனொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(b) ரூபா 25,000/- வட்டி வருமானமானது வங்கிக் கணக்கிற்குப் பெறப்பட்டது.

(c) வியாபாரத்தின் ரூபா 15,000/- பெறுமதியான மின்சாரக் கட்டணப் பட்டியல் ஆனது உரிமையாளரால் அவரது தனிப்பட்ட காசினைப் பயன்படுத்திச் செலுத்தப்பட்டது.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**பிரவீன்** என்பவர் ரூபா 2,500,000/- இனை முதலீடு செய்து வங்கிக் கணக்கொன்றைத் திறந்ததன் மூலம் 2018 ஏப்ரல் 01 இல் **பிரவீன் டிரேடர்ஸ்** என்ற தனியுடமை வியாபாரத்தை ஆரம்பித்தார்.

(1) 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட காசுக் கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வருமாறு:

| காசுப் பெறுவனவுகள் | ரூபா |
|---|---|
| **பிரவீனால்** ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் | 2,500,000 |
| காசு விற்பனை | 1,300,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 831,000 |
| | **4,631,000** |

| காசுக் கொடுப்பனவுகள் | ரூபா |
|---|---|
| மோட்டார் லொறி (2018 அக்டோபர் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 1,500,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | 1,150,000 |
| மின்சாரம் | 72,000 |
| சம்பளங்களும் கூலிகளும் | 290,000 |
| எடுப்பனவு | 175,000 |
| காசுக் கொள்வனவு | 788,000 |
| | **3,975,000** |

(2) வியாபாரத்தின் கொள்கையானது கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையின் மீது ஆண்டிற்கு 25 % இல் மோட்டார் லொறி மீது பெறுமானத்தேய்வு செய்வதாகும்.

(3) 2019 மார்ச் 31 இல் காணப்பட்ட வருமதிகள் மற்றும் சென்மதிகள் மீதிகள் கீழ்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| வியாபார கடன்பட்டோர் | 145,000 |
| வியாபார கடன்கொடுத்தோர் | 110,000 |
| அட்டுறு சம்பளம் | 38,000 |

(4) 2019 மார்ச் 31 இல் எவ்வித இருப்புகளும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் 31 இல் **பிரவீன் டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான, மின்சாரப் பொருட்களை உற்பத்தி செய்யும் **"சமனல டிரேடர்ஸ்"** உடன் தொடர்புடைய தகவல்கள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| தொக்குகள்: | |
| 2018 ஏப்ரல் 01 இலான மூலப்பொருட்கள் | 3,400,000 |
| 2019 மார்ச் 31 இலான மூலப்பொருட்கள் | 2,100,000 |
| 2018 ஏப்ரல் 01 இலான புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 825,000 |
| 2019 மார்ச் 31 இலான புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 1,250,000 |
| மூலப்பொருட் கொள்வனவு | 3,200,000 |
| தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் | 675,000 |
| மின்சாரச் செலவினம் | 600,000 |
| பாதுகாப்புச் செலவினம் | 400,000 |
| உட்காவுகைக் கூலி - மூலப்பொருட்கள் | 120,000 |
| நேர் கூலி – உற்பத்திப் பணியாளர்கள் | 1,200,000 |
| தொழிற்சாலை இயந்திரப் பெறுமானத்தேய்வு | 500,000 |
| தொழிற்சாலை வாடகை | 1,100,000 |
| தொழிற்சாலை இயந்திரத்தின் பராமரிப்புச் செலவினம் | 110,000 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) பின்வரும் செலவினங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்:

| செலவினம் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரச் செலவினம் | 70% | 30% |
| பாதுகாப்புச் செலவினம் | 60% | 40% |

(2) உற்பத்தி பணியாளர்கள் நேர் கூலிக்கு மேலதிகமாக உற்பத்தி செய்யும் ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ.200/- மேலதிக ஊக்குவிப்பு (Incentive) கொடுப்பனவிற்கு உரித்துடையவர்கள்.

(3) ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த உருப்படிகளின் எண்ணிக்கை 2,500 அலகுகள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

**(a)** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சமனல டிரேடர்ஸின்** உற்பத்திக் கணக்கைத் **தயாரிக்குக.** (08 புள்ளிகள்)

**(b)** ஓர் உருப்படிக்கான உற்பத்திக் கிரயத்தைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

2019 மார்ச் 31 இலான **ஜனசெத டிரேடர்ஸின்** பரீட்சை மீதியானது இணங்கவில்லை. ஏற்பட்ட வித்தியாசமான ரூ.43,000/- தொங்கற் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டது.

பின்னர் கீழ்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன:

(1) மீள்விற்பனை நோக்கில் மேற்கொள்ளப்பட்ட காசுக் கொள்வனவான ரூபா 68,900/- கொள்வனவுக் கணக்கில் ரூபா 86,900/- ஆகப் பதிவு செய்யப்பட்டது. இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(2) இயந்திரத்தின் பராமரிப்புச் செலவான ரூபா 33,600/- ஆனது இயந்திரக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது.

(3) உரிமையாளரால் ஈடுபடுத்தப்பட்ட ரூபா 165,000/- ஆன மேலதிக மூலதனமானது தவறுதலாக வியாபாரக் கடன்கொடுத்தோர் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டது. எனினும் மற்றைய பதிவானது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) வாடகை வருமானமாகப் பெறப்பட்ட ரூபா 21,000/- கணக்கேடுகளிலிருந்து முற்றாக விடுபட்டுள்ளது.

(5) வாடகைச் செலவினமான ரூபா 98,000/- ஆனது வாடகைச் செலவினக் கணக்கில் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டதுடன் இப்பதிவானது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(6) வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான ரூபா 109,000/- கொடுப்பனவானது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் வியாபாரக் கடன்கொடுத்தோர் கணக்கில் எந்தப் பதிவும் செய்யப்படவில்லை.

(7) ரூபா 73,900/- காசு விற்பனையானது விற்பனைக் கணக்கில் ரூபா 37,900/- ஆகப் பதிவு செய்யப்பட்டது. எனினும் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கினைத் **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) தனியுடமை நிறுவனமான **பெர்னாண்டோ ஸ்ரோர்ஸின்** 2019 மார்ச் மாதத்திற்கான கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் (ஊடுசெயல்) கீழ்வருமாறு:

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 01.03.2019 | மீள்விற்பனை நோக்கில் ரூபா 825,000/- பெறுமதியான பொருட்கள் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 05.03.2019 | ரூபா 420,000/- கிரயமான பொருட்கள் ரூபா 525,000/- க்கு காசினடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன. |
| 15.03.2019 | **பெர்னாண்டோ** தனது செலவுக்காக ரூபா 75,000/- காசினைத் எடுத்திருந்தார். |
| 26.03.2019 | கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக ரூபா.95,000/- ஆனது கடன் கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்டது. |
| 30.03.2019 | ரூபா 100,000/- ஊழியர் சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. |
| 31.03.2019 | அலுவலகப் பாவனைக்காக ரூபா 1,500,000/- தளபாடமானது கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது. |

**நீங்கள் செய்யவேண்டியது:**

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஊடுசெயல்களினதும் தாக்கத்தைப் பதிவு செய்க.

*[நடைமுறையல்லாச் சொத்துக்கள் (நிலையான சொத்துக்கள்) + தொக்கு + காசு = உரிமையாண்மை + பரிப்புக்கள்]* (06 புள்ளிகள்)

(b) **சமரவீர டிரேடர்ஸ்** ஆனது ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான கீழ்வரும் ஊடுசெயல்கள் அவ்வியாபாரத்தின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன:

(1) வியாபாரத்தின் உரிமையாளரான **சமரவீர** தனது ரூபா 750,000/- பெறுமதியுடைய தனிப்பட்ட மோட்டார் வாகனத்தை வியாபாரப் பாவனைக்காக 2019 மார்ச் 01 இல் மாற்றீடு செய்துள்ளார்.

(2) ரூபா 250,000/- பெறுமதியான இயந்திரமானது **வரையறுக்கப்பட்ட XY** நிறுவனத்திடமிருந்து 2019 மார்ச் 15 இல் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.

(3) மின்சாரக் கட்டணமான ரூபா 25,000/- ஆனது தொலைபேசிச் செலவினக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது. ஆயினும் மற்றைய பதிவானது சரியாக மேற்கொள்ளப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேற்கூறிய ஊடுசெயல்களைப் பதிவு செய்வதற்கான பொது நாட்குறிப்பேட்டைத் **தயாரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**KPM டிரேடர்ஸ்** ஆனது **சாம் சில்வாவுக்குச்** சொந்தமான தனியுடமை வியாபாரம் ஆகும். 2019 மார்ச் 31 இலான **KPM டிரேடர்ஸின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு:

**KPM டிரேடர்ஸ்**

**2019 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணி மற்றும் கட்டடங்கள் (காணியின் பெறுமதி ரூபா.3,000,000/-) | 8,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 2,200 | |
| அலுவலக உபகரணம் | 1,100 | |
| திரள் தேய்மானம் - 2018 ஏப்ரல் 01 இல்: | | |
| கட்டடங்கள் | | 1,200 |
| மோட்டார் வாகனங்கள் | | 400 |
| அலுவலக உபகரணம் | | 225 |
| இருப்பு – 2018 ஏப்ரல் 01 இல் | 1,800 | |
| விற்பனைகள் | | 25,200 |
| கொள்வனவுகள் | 15,500 | |
| மின்சாரம் | 1,200 | |
| நீர் | 350 | |
| வியாபார வருமதிகள் | 2,800 | |
| வியாபார சென்மதிகள் | | 1,900 |
| காகிதாதிகள் | 150 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,250 | |
| செலுத்தப்பட்ட சோலைவரி | 180 | |
| வங்கிக் கடன் | | 900 |
| வங்கி மேலதிகப்பற்று | | 1,350 |
| ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு – 2018 ஏப்ரல் 01 இல் | | 170 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 110 | |
| மூலதனம் - 2018 ஏப்ரல் 01 | | 3,295 |
| | **34,640** | **34,640** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2019 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதி இருப்பின் பெறுமதி ரூபா. 1,850,000/-.

(2) வியாபாரத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையின்மீது கீழ்வரும் விகிதங்களில் பெறுமானத்தேய்வு செய்வதாகும்:

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 10 % |
| மோட்டார் வாகனங்கள் | : | 20 % |
| அலுவலக உபகரணம் | : | 25 % |

(3) கம்பனி முகாமையானது ரூபா 100,000/- வியாபார வருமதிகளை அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கத் தீர்மானித்ததுடன் 2019 மார்ச் 31 இல் மீதமுள்ள வியாபார வருமதிகளின் மீது 10 % பொது ஐயக்கடன் ஏற்பாடு செய்யத் தீர்மானித்தது.

(4) 2019 மார்ச் மாதத்திற்கான ரூபா 143,000/- மின்சாரக் கொடுப்பனவானது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(5) 12% வருடாந்த வட்டி வீதத்தில் 2019 மார்ச் 01 ஆந் திகதி வங்கிக் கடனொன்று பெற்றுக் கொள்ளப் பட்டது. முதலாவது கடன் தவணைக் கட்டணமானது 2019 ஏப்ரல் 02 இல் செலுத்தப்பட்டதுடன் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய வட்டியானது கணக்கேடுகளில் பதியப்படவில்லை.

(6) செலுத்தப்பட்ட சோலைவரியானது 2019 சனவரி 01 இலிருந்து 2019 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு உரியதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2019 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |